**மெதகம பிரதேச சபை**
**மொனறாகலை மாவட்டம்**

-------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 22 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஜுன் 26 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, மெதகம பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் பயன்படுத்தப்படும் 39 காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 பிரதேச சபைகளை பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தஹம்கம சனசமுக மண்டபத்தை மேம்படுத்துவதற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,392,781 மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்கு சொந்தமான உழவு இயந்திரத்திற்கு மழை மேவுகை அமைப்பதற்கான கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 67,500 மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) விளம்பர அறிவித்தல் பதாகைகளை காட்சிப்படுத்துவதற்காக ஆண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய ரூபா 27,950 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) நிதி நிலைமை தொடர்பான கூற்றில் காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 745,527 தொகையான சேமிப்புக் கணக்கின் மீதி முதலீட்டின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,992,417 ஆன கடன் மீதியிலிருந்து எதிர்வரும் கணக்காண்டில் செலுத்த வேண்டிய ரூபா 1,749,790 நடைமுறைபொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் ரூபா 169,387,720 ஆன 02 சொத்து விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

**1.3.3 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | |
| 158, 161, 162, 163 மற்றும் 166 ஆம் பிரிவுகள் | 133,278 | நிலுவை வீதவரி தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் | | |
| (i) 193 ஆம் விதி | - | ஒவ்வொரு வருமானம் மற்றும் செலவின விடயங்களின் கீழ் வரும் சேமிப்புக்கள் மற்றும் மிகைகள் அது தொடர்பான விடயங்களை தெரிவுபடுத்தும் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 214 ஆம் விதி | | ஒவ்வொரு ஆண்டின் இறுதியின் போது 203 ஆம் இலக்க விதியின் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள வகையில் மெய்மையாய்வு சபையொன்று மூலம் களஞ்சியப் பொருட்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (இ) 1988 மே 17 ஆந் திகதிய 22 ஆம் இலக்க உள்ளுராட்சி மன்ற சுற்றறிக்கை | - | சபையினால் 2005 ஆம் ஆண்டில் வீதவரி மதிப்பீட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டின் வீதவரி அறவிடப்பட்டிருந்ததுடன் 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை வீதவரி மதிப்பீடு செய்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,458,867 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,191,382 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி மற்றும் வரி | 892,538 | 1,126,073 | 1,059,156 | 141,826 | 745,538 | 908,149 | 846,469 | 167,486 |
| வாடகை | 14,109,301 | 15,149,541 | 14,992,056 | 158,084 | 14,974,963 | 14,200,432 | 14,122,732 | 78,300 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 552,400 | 573,670 | 573,670 | - | 512,600 | 457,918 | 457,918 | - |
| ஏனைய வருமானம் | 7,788,550 | 11,881,795 | 8,184,511 | 3,697,284 | 6,605,100 | 9,971,586 | 8,173,880 | 1,797,707 |
| மொத்தம் | **23,342,789** | **28,731,079** | **24,809,393** | **3,997,194** | **22,838,201** | **25,538,085** | **23,600,999** | **2,043,493** |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 28.7 மில்லியனான மொத்த வருமானத்தில் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 24.8 மில்லியன் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 வீதவரி மற்றும் வரி

முன்னைய ஆண்டிற்குரிய நிலுவை வீதவரி வருமானம் ரூபா 141,540 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்நிலுவை வீதவரிகளிலிருந்து ரூபா 53,166 சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலுவை அறவீடு 38 சதவீதம் அளவிலான மிகவும் குறைந்த பெறுமதியொன்றாக இருந்தது.

### 2.2.4 வாடகை

நீண்டகாலமாக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 142 கடைகள் 2013 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அம் மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை அறவிடப்படாமல் பழைய வாடகையின் மீது 40 சதவீதம் சேர்க்கப்பட்டு வாடகை அறவிடப்பட்டிருந்தது. மேற்படி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு 05 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் உரிய மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை அறவிடப்படாமையால் ரூபா 7,298,473 ஆன வருமானம் கிடைக்காமல் போயிருந்தது.

### 2.2.5 நிலையான அறிவித்தல் பதாகை கட்டணம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த 11 பதாதைகளுக்காக ரூபா 27,950 ஆன கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,726,834 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 1,869,200 ஆக இருந்தது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை மாத்திரம் உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) பணிகளை நிறைவேற்றுவதில் தாமதம்**

**(i) தகனக் கிரியை கூட நிர்மாணம்**

ரூபா 21,626,232 மதிப்பீட்டு பெறுமதியான தகனகிரியை கூடத்தின் நிர்மாண வேலைகள் 2015 சனவரி 30 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு தகனக்கிரியை கூடத்தை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ii) மெதகம மாநாட்டு மண்டபத்தை நிர்மாணித்தல்**

ரூபா 28,477,004 மதிப்பீட்டுப் பெறுதியான மெதகம மாநாட்டு மண்டபத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 2015 சனவரி 14 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1816/43 ஆம் இலக்க 2013 யூன் 28 ஆந் திகதிய வர்த்தமானி பத்திரத்தின் மூலம் வெளியிடப்பட்ட ஊவா மாகாண உப விதிகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் அதன் 13 ஆவது பகுதியின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் கழிவுப்பொருள் வரி விதிக்கப்பட்டு கழிவுப் பொருள் முகாமைத்துவ செலவினம் மீள் நிரப்பட்டிருக்கவில்லை.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் பிரகாரம் சபை அறிந்துகொள்ளாததன் காரணமாக அந் நோக்கங்களுக்கான உலகலாவிய குறிகாட்டிகள் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலைமை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டம் 2018 மே 25 ஆந் திகதி அளவிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

(அ) சபைக்கு சொந்தமான கடை தொகுதி கட்டிடத்தின் 13 ஆம் இலக்க கடையை குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் பின்பற்றப்பட்டிருந்த 39 கட்டிடத் திட்டங்களுக்காக இணக்க சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் ரூபா 21,250 ஆன வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

(இ) 1986 மார்ச் 10 ஆந் திகதிய 392/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 1985 இன் மார்ச் 20 ஆந் திகதிய 08/1/38 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த 22 நிர்மாணங்கள் தொடர்பாக திட்டக்குழு அங்கீகாரம் வழங்கப்படாதிருந்ததுடன் உரிய கட்டணங்களை அறவிட்டு மேவுகை அங்கீகாரத்தை வழங்குவதற்கு அல்லது சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அல்லது வேறு நடைமுறையொன்று எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வருடாந்த பொருள் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்டிருந்த 28 கேஜ் அளவிலான 96 கூரைத் தகடுகள் பற்றாக்குறை தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரையில் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 பெறுகைகள்

### 3.4.1 பெறுகை திட்டம்

மீளாய்வாண்டிற்காக பிரதேச சபையினால் வருடாந்த பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

# 04. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக பிரதேச சபையின் பாதிடப்பட்ட வருமானம், செலவினம் மற்றும் உள்ளபடியான வருமானம், செலவினங்களுக்கிடையே கருத்திற் கொள்ளக்கூடிய விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமாக கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

மீளாய்வாண்டிற்காக சபையினால் போதியளவில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 05 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட குறைபாடுகள் சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன். பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படாமை. |
| (ஆ) | மனித வள முகாமைத்துவம் | பதவியணியினர் அங்கீகரித்துக் கொள்ளப்படாமை. |
| (இ) | ஒப்பந்த நிர்வாகம் | போதியளவு மேற்பார்வையொன்று இல்லாமை. |